Kanton Bern
Canton de Berne

hallo–bern.ch
salut–berne.ch

# மொழியும் உள்வாங்குதல்

உள்வாங்குதல் (ஒருங்கிணைப்பு)
ஒருங்கிணைப்பு (உள்வாங்குதல்) வசதி
மொழி
டொச் அல்லது பிரான்ஸ் மொழி கற்றல்

# உள்வாங்குதல் (ஒருங்கிணைப்பு)

வெளிநாட்டவர்கள் இங்குள்ள சமூகத்துடன் சேர்ந்து பழகி உள்வாங்கிக் கொள்ள வேண்டும். இதன்மூலம் சட்டங்களைக் கடைப்பிடிக்கவும் பொருளாதார ரீதியாகத் தம்மை நிலைநிறுத்தவும் தம் வாழிடத்தில் பேசப்படும் ஒரு அரச மொழியைக்கற்க வேண்டும்.

## முக்கியமான அடிப்படைக் கோட்பாடு

சுவிஸின் குடியிருப்பாளர்கள் கட்டாயமாக அரசியலமைப்பைக் (உ+மாக ஆணுக்கும் பெண்ணுக்கும் சமவுரிமை) கவனத்தில் கொண்டு சட்டத்தை மதித்து நடக்க வேண்டும் அதைத்தவிர இயலுமானவரை பொருளாதார ரீதியாகத் தம்மை நிலை நிறுத்தவும் முயலவேண்டும். வெளிநாட்டிலிருந்து குடியேறியவர்கள் தாம் குடிபுகுந்த இடத்து அரச மொழியைக் விரைவில் கற்க வேண்டும். ஒருங்கிணைவு என்பது இரு பக்கத்தினரும் தம் பங்களிப்பைச் செய்தால் மட்டுமே வெற்றியளிக்கும். அதனாலேயே இந்நாட்டு மக்கள் வெளிநாட்டவர்களுடன் திறந்தமனதுடன் பழக எதிர்பார்க்கப்படுகிறது.

## சுய பொறுப்பு

வெளிநாட்டவர்கள் பொருளாதாரம் சமூக கலாச்சாரத்தில் சரியான வழியில் சென்று பயனடைய வேண்டுமென மத்தியஅரசு, மாநில மற்றும் கிராமசபை அக்கறை காட்டுகிறது. வெளிநாட்டவர்கள் அவர்கள் தாமே சுயமாகச் செயற்படவும் உள்வாங்கலிற்குத் தம்மாலான முயற்சிகள் எடுக்கவும் வேண்டும். அதற்காக ஏற்படுத்தப்பட்ட வசதிகளைப் பயன்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சமூக வாழ்க்கையில் பங்கெடுத்தல்

சுவிஸ் மக்களுடன் ஒன்றிணைந்து அவர்களைப் பழகிக் கொள்ள ஒரு சிறந்த வழி வகைகளை கழகங்கள் ஏற்படுத்துகின்றன. அதைவிட வதியும் கிராமசபைகளில் நடக்கும் விழாக்கள் நிகழ்ச்சிகள் கூட தொடர்புகளை ஏற்படுத்த உதவும். சுவிஸ் மக்கள் எல்லோரும் வெளிநாட்டுக் கலாச்சாரத்திற்கு திறந்த மனதைக் காட்டமாட்டார்கள் என்பதால் ஆரம்பம் சிலசமயம் கடினமாகத் தோன்றலாம். சில சமயம் விடாமுயற்சியும் தேவைப்படலாம்.

## தகவல்கள் / உதவிகள்

பேர்ண் மாநிலத்தில் புதிதாகக் குடியேறியவர்களுக்காக பல விதமான தொடக்க நிலையங்கள் உள்ளன. முதலாவது சிறந்த தொடக்க நிலையம் எப்போதும் கிராமசபை ஆகும். அத்துடன் வெளிநாட்டவர்களுக்கென விசேடமான தொடக்க நிலையங்களும் உள்ளன. பேர்ண் மாநிலத்தில் நான்கு பிரதேசத்தில் ஒருங்கிணைப்பு தொடர்பு இடங்கள் உள்ளன (Ansprechstellen Integration | antennes d'intégration). இங்கு சுவிஸில் வாழும் முறை பற்றியும் மற்றும் பல விடயங்கள் சார்ந்த திடமான கேள்விகளுக்கும் பதில் தருவார்கள். டொச் அல்லது பிரான்ஸ் மொழி பேசத் தெரியாதவர்கள் யாரையாவது மொழி பெயர்க்கக் கூட்டி வரலாம், அல்லது ஒரு மொழிபெயர்ப்பாளரை ஒழுங்கு செய்யக் கேட்கலாம். சில இடங்களில் வேறு மொழிகளிலும் தகவல்கள் தரப்படும்.

மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-bern.ch/ta/language-and-integration/integration

# ஒருங்கிணைப்பு (உள்வாங்குதல்) வசதி

ஒருங்கிணைப்பைப் பாடசாலைகளிலும் வேலையிடங்களிலும் காணலாம். மேற்குறிப்பிட்ட வசதிகள் கிடையாதவர்களுக்கு வேறும் பலவகையான ஒருங்கிணைப்பு வசதிகள் உள்ளன.

## குறிப்பிட்ட வசதிகள்

வெளிநாட்டவர்கள் சுவிஸ் மக்களுடன் சேர்ந்து வாழவும் தொடர்பு கொள்ளவும் பல வகையான குறிப்பிட்ட வசதிகள் உள்ளன. அவை மற்றவர்களுடன் சேர்ந்து பேசுவது ஓய்வுநேர வசதி வாய்ப்புக்கள் விரிவுரைகள் அல்லது வகுப்புகளாகும். இந்த வாய்ப்புகள் பற்றி பேர்ண் ஒருங்கிணைப்புத் தொடக்க நிலையம் அல்லது வதியும் கிராமசபை அறியத்தரும். அதிகமான கிராமசபைகள் புதிதாகக் குடிவந்தவர்களை வரவேற்பதற்காக நிகழ்ச்சியை ஒழுங்கு செய்யும். - முதல் கண்ணோட்டத்தைப் பெற இது ஒரு நல்ல வாய்ப்பு ஆகும்.

## கழகங்கள்

பேர்ண் மாநிலத்தில் அதிகமான குடியிருப்பாளர்கள் ஏதோ ஒரு கழகத்தில் (Verein | Association) அங்கத்தவராயிருப்பார்கள். பல வகைப்பட்ட ரசனைக்கேற்ப அதிக கழகங்கள் உள்ளன. சிறிய கிராமசபைகளில் கூட விளையாட்டு - கலாச்சாரம் மேலும் பல கழகங்கள் உள்ளன. அவை மனிதர் ஒருவரோடொருவர் தொடர்பு கொள்ள சிறந்த சந்தர்ப்பங்களை ஏற்படுத்துகின்றன.அதிகமான கழகங்கள் அனைத்து மக்களுக்காகவும் திறந்துள்ளன. கழகங்கள் பற்றிய தகவல்களை கிராமசபைகளின் இணையத்தளங்களில் தேடலாம்.

## வெளிநாட்டவர் அமைப்புகள்

வெளிநாட்டவர்கள் தமக்குத் தாமே ஒழுங்கு செய்யக்கூடியமாதிரி மொழி நாடு சமய வாரியாகப் ப அமைப்புகள் உள்ளன. இவ் அமைப்புகள் புதிதாக சுவிசுக்குக் குடியேறிய தமது அங்கத்தவர்களுக்கு ஒருங்கிணைப்புக்கான உதவிகள் மற்றும் ஆலோசனை வசதிகளைக் கொடுப்பதன் மூலம் பேர்ண் மாநிலத்திற்கு உதவுகிறது.

## இளையவர்களுக்கான வசதிகள்

பேர்ண் மாநிலத்திலுள்ள இளையவர்கள் தமது ஓய்வு நேரத்தைக் கழிக்கவும் தமது வயதையொத்தவர்களுடன் பழகிக் கொள்ளவும் எனப் பல விசேட வசதிகள் உள்ளன. அதிகமான கிராமசபைகளில் ஓய்வு நேரச் சலுகைகளுடன் கூடிய சந்திப்புக்கள் உள்ளன. இங்குள்ள இளையவர்களைப் பராமரித்து அவர்கள் எண்ணங்களைச் சேர்த்து செயற்திட்டமாக்குவார்கள் (Jugendarbeit | Animation de jeunesse). இச் சலுகை வழக்கமாக இலவசமானது. இளைஞர் அமைப்புகளில் ஒரே வயதினர் சேர்ந்து தடகள இயற்கை விளையாட்டுக்களில் பங்கெடுப்பார்கள். இதைக் கழகங்கள் கிராமசபைகள் அல்லது தேவாலயங்கள் நடத்தலாம். இந்த சலுகைகள் அனைத்து இளையோருக்கும் உரியது. வதியும் கிராமசபைகளில் மேலதிக விபரங்களை அறியலாம்.

மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-bern.ch/ta/language-and-integration/integration-programmes

# மொழி

பேர்ண் மாநில டொச் மொழி அல்லது பிரான்ஸ் மொழி தெரியாத குடியிருப்பாளர்கள் டொச் அல்லது பிரான்ஸ் மொழியைக் கற்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. மொழி அறிவு உள்ள நிலை சமூக உள்வாங்கலுக்கும் தொழில் சந்தையில் வெற்றியையும் தேடித்தரும்.

## அரச மொழி

சுவிஸில் 4 மொழிகள் பாவனையில் உள்ளன: டொச் ,பிரெஞ்ச், இத்தாலி, ரட் றோமானிஸ். பேர்ண் மாநிலத்தில் இரு அரச மொழிகள் உள்ளன: டொச் மற்றும் பிரான்ஸ்.

## உயர் டொச் மொழி / சுவிஸ் டொச் மொழி

சுவிஸில் டொச் மொழியில் உயர் டொச் (Hochdeutsch | l'allemand standard) மற்றும் சுவிஸ் டொச் (Schweizerdeutsch | le suisse allemand)மொழி என்று வித்தியாசம் உண்டு. பாடசாலையிலும் பகுதிவாரியாக வானொலி மற்றும் தொலைக்காட்சியில் ஒரு பகுதியும் எழுத்துடொச் மொழி பேசுவார்கள். எழுத்து மொழியும் உயர் டொச்மொழியாகும். ஆயினும் அன்றாடப் பேச்சு மொழி சுவிஸ் டொச் ஆகும். அங்கே டொச்சில்; ஒரு பேச்சு வழக்கு மொழியைப் பயன்படுத்துவார்கள். இந்தப் பேச்சு வழக்கு நன்றாக டொச் தெரிந்தவர்களுக்கே எல்லாம் விளங்கிக் கொள்வது கடினம். வெளிநாட்டவர்கள் சுவிஸ் டொச் பேசவேண்டுமென்று எதிர்பார்க்கப்படவில்லை ஆனாலும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின்பு அதை விளங்கிக் கொண்டாலே போதும். அதே வேளை சுவிஸ் மக்களை உயர் டொச் மொழி பேசச் சொல்லிக் கேட்கலாம்.

## டொச் மொழியும் பிள்ளைகளும்

வேற்று மொழி பேசும் வெளிநாட்டவர்களின் பிள்ளைகளை இயலுமானவரை ஆரம்பம் தொட்டே டொச்மொழிபேசும் பிள்ளைகளுடன் தொடர்பு கொள்ள விடவேண்டும். இதற்காகவே விளையாட்டுக் குழுக்கள் அல்லது பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமான விசேட வசதிகள் உள்ளன. பிள்ளைகளுடன் அதிகம் பேசி அவர்கள் சொல்வதைக் கேட்டு கதைகள் சொல்வதன் மூலம் பெற்றோரும் பிள்ளைகளுக்கு உதவலாம். பெற்றோர் இலகுவாகப் பேசக்கூடிய மொழியிலேயே பிள்ளைகளுடன் பேசலாம்.

## மொழிபெயர்ப்புக்கள்

சுவிசுக்கு வந்தவுடனேயே டொச் அல்லது பிரான்ஸ் நன்றாகப் பேசவும் விளங்கவும் வேண்டுமென எதிர்பார்க்கபடமாட்டாது. இருப்பினும் சில சந்தர்ப்பங்களில் ஒருவர் தன்னை விளங்க வைக்கவேண்டிய சந்தர்ப்பம் வரலாம். அநேகமான புதிதாக வந்தவர்கள் தமது உறவினர்களையோ அன்றி தெரிந்தவர்களையோ மொழிபெயர்க்கக் கூட்டிவரலாம். பிரச்சனையான தனிப்பட்ட நம்பிக்கையான பேச்சுவார்த்தைக்கு ஒரு தொழில்முறை மொழிபெயர்ப்பாளரை வைப்பது நல்லது. கலாச்சார சிறப்பம்சங்களைக் கருத்தில் கொண்டு மொழிபெயர்ப்பதற்கு கலாச்சார மொழிபெயர்ப்பாளர்கள் விசேடதிறமை பெற்றுள்ளனர். கடிதங்களை விளங்கி எழுதிக்கொள்ளவும் மற்றும் விண்ணப்பங்களை நிரப்பிக் கொள்ளவும் பேர்ண் மாநிலத்தில் வேறான எழுத்து சேவை நிலையங்கள் சேவைகளை (Schreibdienst | le service de correspondance)வழங்குகின்றன.

மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-bern.ch/ta/language-and-integration/language

# டொச் அல்லது பிரான்ஸ் மொழி கற்றல்

டொச் அல்லது பிரான்ஸ் சரியாகப் படிக்கவேண்டுமானால் ஒரு டொச் வகுப்புக்குப் போவது பரிந்துரை செய்யப்படுகிறது. பேர்ண் மாநிலத்தில் டொச் வகுப்புகள் பல வகை வாழ்க்கைச் சூழ் நிலைகளிலும் பரந்து சீரமைக்கப்பட்டுள்ளது.

## வசதி வாய்ப்புக்கள்

பேர்ண் மாநிலத்தில் மொழி வகுப்புகள் வித்தியாசமான இலக்குகள் கொண்ட குழுக்களாக பல வழங்குநர்களால் நடத்தப்படுகின்றன. சில வழங்குநர்கள் வணிக நோக்கத்திற்காகவும் மற்றவை இலாபத்திற்காகவோ அல்லது மாநிலமளவிலோ நடத்தலாம். எவர் லத்தீன் எழுத்துக்களை எழுதத்தெரியாமல் இருக்கிறாரோ அல்லது எழுத வாசிக்கத் தடுமாறுகிறாரோ அவர் எழுத்துவகுப்புக்குப் (Alphabetisierungskurs | Cours d'alphabétisation) போகலாம். மொழி வகுப்புக்குப் போக முன்பு வகுப்பின் தன்மை அதற்குரிய கட்டணம் பற்றி அறிந்திருக்கவேண்டும்.தாய்மார் தம் பிள்ளைகளுடன் போவதற்கென அதிகமான கிராமசபைகளில் நடத்தப்படும் விசேட வகுப்பு மூலம் தாய்மார் மட்டுமல்ல பிள்ளைகளும் கூட மொழியால் ஊக்குவிக்கப்படுகிறார்கள் (MuKi-Deutsch | Cours de français mère-enfant). பிரதேச ஒருங்கிணைப்புத் தொடர்பு நிலையம் (Ansprechstellen Integration | antennes d'intégration) அல்லது வதியும் கிராமசபை சலுகைகள் பற்றி அறியத்தரும்.

## மொழியின் தரம்

டொச் அல்லது பிரான்ஸ் மொழியறிவின் ஒரு அளவுகோலாக ஐரோப்பிய குறிப்புச்சட்டகங்கள்" (GER)என வகுக்கப்படும். இதில் 6 அடுத்தடுத்த மொழியின் நிலைகள் A1(ஆரம்பம்) தொடக்கம் C2 (மிகவும் திறமையான மொழியறிவு )வரை உள்ளன. அதிகமான மொழிவகுப்புகள் இந்தப் படிகளிலே அமைக்கப்பட்டுள்ளன. நிலை A1 உம் A2 உம் டொச் அல்லது பிரான்ஸ் மொழியின் அடிப்படை அறிவைக்காட்டும். அங்கீகரிக்கப்பட்ட தொழிற்கல்வி கற்க முயற்சி செய்ய விரும்பினால் அதிகமாக நிலை B1 உம் B2 உம் படித்திருக்கவேண்டும். C1உம் C2 படித்து மேம்பட்டவர்கள் பல்கலைக் கழகங்களில் உயர்கல்வி கற்கலாம்.

## மொழியறிவை உறுதிப்படுத்தல்

வெளிநாட்டு மொழி குடியேறுபவர்கள் இங்கு பிரஜாவுரிமை பெற, குடியுரிமை வழங்குதல் மற்றும் நீட்டிப்பு அல்லது நிரந்தர வதிவிட அனுமதி மற்றும் குடும்ப மறு ஒருங்கிணைப்பு ஆகியவற்றுக்கான தேசிய மொழியின் அறிவை நிரூபிக்க வேண்டும்.

## நிதி உதவி

மொழி வகுப்புக்கு வழமையாகத் தாமே பணம் செலுத்தவேண்டும். இதன் கட்டணங்கள் இடத்துக்கிடம் வித்தியாசப்படும். இதற்காக (ஒரு வகுப்பிற்குரிய கட்டணம்) ஒப்பிட்டுப் பார்ப்பது. பிரயோசனப்படும் ..சில வகுப்புகளுக்கு பேர்ண் மாநிலம் அல்லது கிராமசபை நிதி உதவி செயவதால் படிப்பவர்களுக்கு மலிவாக முடியும்.

மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-bern.ch/ta/language-and-integration/learning-german-or-french